**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 161/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : சுப்பிரமணி |
| Father's Name/ Husband's Name | : ராஜப்பா |
| Village & Taluk | : விழுப்புரம் |
| Calling | : பரிசோதகர் |
| Age | : 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது தமிழ்நாடு போக்குவரத்து துறையில் டிக்கெட் பரிசோதகராக விழுப்புரத்தில் பணி செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் நான் மேற்படி இடத்தில் மேற்படி பணியில் இருந்தபோது கடந்த 08.06.2022 அன்று TN 21 N 1878 என்ற அரசு பேருந்து தடம் எண் 216 என்பதில் எதிரி ஜீவகன் DR No.5478 என்பவர் ஓட்டுநர் ஆகவும், திரு. ராஜா CR.No.6358 என்பவரும் நடத்துனராக பணியில் இருந்தனர். மேற்படி பேருந்தானது அன்றை தினம் விழுப்புரம் – வேலூர் தடத்தில் சென்றிருந்தது. மேற்படி பேருந்தானது விழுப்புரம் – செஞ்சி சாலையில் மட்டப்பாறை அருகே இரு சக்கர வாகனத்தின் மீது விபத்து ஏற்பட்டதாக காவல் ஆய்வாளர் என்னிடம் கூறியதன் பேரில் அன்றைய தினம் மேற்குறிப்பிட்ட நபர்கள் பணியில் இருந்தனர் என்பதை கூறி சான்று வழங்கினேன். **மேற்படி பணி சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. 08.06.2022 அன்று எதிரி தான் மேற்படி பேருந்தை ஓட்டினார் என்று நான் சான்று அளிக்கவில்லை என்றால் சரியல்ல காவலர்களிடம் சான்றினை ஒப்படைத்தேன். மேற்படி சான்றிலும், காவலர்கள் விசாரணையின்போதும் எதிரி மேற்குறிப்பிட்ட வாகனத்தை எத்தனை மணிக்கு நடை எடுத்தார் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அன்றை தேதியில் மேற்படி பேருந்தானது வேறு எந்த வழித்தடத்தில் சென்றது என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் அன்றைய தினம் விழுப்புரம் – வேலூர் வழித்தடத்தில் சென்றது. காவலர்கள் கேட்டுக்கொண்டதால் நான்

சான்றளித்தேன் என்றாலும், காவலர்கள் என்னை நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.